
# ஆத்ம ஜோதி

செ. முத்துக்குமார்



"திருவனந்தபுரம் சுவாமி அபேதானந்தபாரதி"

# ஆத்ம ஜோதி.

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)


எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

...சுத்தானந்தர்...


சோதி 11 சுடர் 5. விளம்பி ௵ பங்குனி 1-3-59


## - பொருளடக்கம் -


| | | |
|---|---|---|
| பேரின்பத் தெள்ளமுது | ... | 129 |
| வாழ்வின் இரகசியம் | ... | 130 |
| புரட்சி | ... | 131 |
| அருள்மொழிகள் | ... | 133 |
| தத்துவப் பற்றைத் தளரவிடாதீர் | ... | 134 |
| குருதேவா ஓம் | ... | 137 |
| யோக ஆசனங்கள் | ... | 138 |
| இறை வழிபாடு | ... | 141 |
| பேதப்பிணக்கறுத்த அபேதன் | ... | 144 |
| வானொலியாகுக | ... | 146 |
| கடமை | ... | 150 |
| பாரதப்பண்பாடு | ... | 151 |
| செயற்கரிய செய்வார் பெரியர் | ... | 154 |
| என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே | ... | 155 |
| என்னை ஓர் வார்த்தைக்குட்படுத்தி... | ... | 159 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள்சந்தா ரூ. 75-00 வருடசந்தா ரூ. 3-00
— தனிப்பிரதி சதம் -30 —

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.
பதிப்பாசிரியர்: நா. முத்தையா.
ஆத்மஜோதி நிலையம்-நாவலப்பிட்டி (சிலோன்)


# பேரின்பத் தெள்ளமுது.

(மகரிஷிசுத்தானந்தர்)

15. என்னைக் கொடுத்ததுவு முன்னைக் கொடுத்தனை
யெனதி யானென்ப தினியேன்
என்னுயிர்க் காதலா, வுன்னிளம் புன்னகையி
லின்னுயிர்க் குளித்து வந்தேன்
பொன்னை நெருப்பினிற் பொலிவேற வாட்டிடும்
பொற் கொல்லன் போற் சிவனைப்
புவிமாயை தன்னிலே வாட்டிமாற் றேற்றியுன்
பூங்கழற் கணியாக்கினை
உன்னைவிட் டாலெனக் குயிரில்லை யுடலில்லை
யுலகில்லை யுறவு மில்லை
ஒன்றில்லைப் பலவில்லை யொளிர் திருச் சக்தியால்
ஒன்று பலவான ஒருவா
அன்னைமடி விளையாடு மருமைக் குழந்தைபோல்
அடிமலரில் விளையாடவே
அங்கிங்கு மெங்குமென் னுருயிர்க் கின்பமாய்
ஆனந்தமான சிவனே !

16. பெற்றாலுன் அமரநிலை பெறவேண்டு மில்லையேற்
பிறவிதனை மாய்க்க வேண்டும்
பேசினுல் உன்மகிமை பேசவேண்டும். அலாற்
பேசாத தனிமை வேண்டும்.
உற்று லருட்பணிக் குறவேண்டு மில்லையேல்
ஒருங்கியுள் ளடங்க வேண்டும்
உன்னினு லுன்பெருமை யுன்னவேண்டும் அல்ல
உன்னலறு மனமதி வேண்டும்
புற்றினு லுன்னையே பற்றவேண்டும்; அலாற்
பற்றற் றிருக்க வேண்டும்.
பார்த்தாற் சுயஞ்சோதி பார்க்கவேண்டும் அலாற்
பார்வை யுள்ளாக்க வேண்டும்.
அற்றுலென் பந்தவினை யறவேண்டு மின்றேலுன்
அருளாடல் புரிய வேண்டும்.
ஆன்மபரி பூரண அகண்டசுக வாரியே
அறிவான பர தெய்வமே !

# வாழ்வின் இரகசியம்.

...(திருலோக சீதாராம்)...

வாழ்க்கை என்பதுபொருள் விளங்காத புதிராகவே மனிதனுக்குத் தோன்றுகிறது. இந்த உலகில் நிலையாக இருப்பது என்னவென்றே தெரிவதில்லை. செல்வம், இளமை, யாக்கை இவை எதுவுமே நிலைப்பதில்லை என்றஉண்மை நமக்குத் தெரிந்தபோதிலும் கூட, இவற்றின்மேல் நமக்குப்பற்று வளர்ந்துகொண்டுதான் இருக்கிறது. நிலைக்காதவை என்று நமக்கு மிக நன்றாகத் தெரிந்திருக்கும் விஷயங்களில் நிலையான பற்றுதல் மட்டும் குறையாமல் இருப்பதென்றால் இது ஒரு விசித்திரமான நிலைதான்.

பொதுவாக மனிதர்கள்தங்கள் இச்சையினால் உலகத்தில்பிறவி எடுக்கிறார்கள். என்று சொல்வதற்கு முடியுமா? பிறந்த பின்புதான் நாம் பிறந்து விட்டோம் என்ற விஷயமே நமக்குத் தெரிகிறது. ஆனால் இந்தப் பிறவியை விட்டுவிடவேண்டிய ஒரு சமயம் வரும் என்பதையும் நாம் அறியும்போது, அந்த நிலையைத்தான் நாம் விரும்பி ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நமது இச்சையினால் இந்தப்பிறவி கிடைக்கவில்லையென்று சொல்லும்போது முடிவைப் பற்றி மட்டும் நினைப்பதற்கு நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் நமக்கு அதிகாரம் கிடையாது என்றுதான் தோன்றும், உண்மையில் நமக்கு, நமது வாழ்வின் எல்லையைப் பற்றி நினைப்பதற்கு அதிகாரம் இருக்கிறதோ இல்லையோ அவசியம் இருக்கிறது.

இந்த அவசியத்தை உண்டாக்கியிருப்பது மனம்தான். இந்த மனம் தான் உலகவாழ்க்கையை நமக்கு உணர்த்துகிறது. வாழ்க்கையின் இன்ப துன்பங்களையும் நன்மை தீமைகளையும் ருசிபார்த்துச் சொல்லுவது இந்த மனம்தான். எனவே இந்த மனம் விசித்திரமான ஒரு கருவி. பொதுவாக இந்த மனம் ஆசைப்படுவதெல்லாம் அழியாத பேரின்பத்துக்குத்தான். காரணம் உலகவாழ்வில் அன்றாடம் பார்க்கின்ற ஒவ்வொன்றும் உருமாறியும் மறைந்தும் போகின்ற உண்மையைப் பார்க்கும் போது, அழியாதநிலையொன்று இருந்து அந்த இடத்தில் போய் நாம் பத்திரமாக வாழமாட்டோமா என்ற ஏக்கம் உண்டாவது இயல்பு.

——

# புரட்சி

(ஆசிரியர்)

புரட்சி என்றதும் அன்பர்கள் உள்ளத்தில் பலவித சந்தேகங்கள் எழுகின்றன. ஆத்மஜோதியும் தனது ஆத்மீகக் கொள்கையை மாற்றி ஏதோஒரு தீவிரவாதமான அரசியற் கட்சியைச் சார்ந்துவிட்டதோ என்றுகூட நினைக்கத் தோன்றுகின்றது. இன்றைய உலகில் புரட்சியை விரும்பாத மக்களே கிடையாது. புரட்சியை விரும்பாத ஸ்தாபனங்களோ கட்சிகளோ கிடையாது. அப்படியானால் புரட்சியைக் கண்டு பயப்படுவானேன்?

மக்கள் அகத்தில் புரட்சி ஏற்பட வழிநடத்தப்படுகிறார்களில்லை. புறப் புரட்சியையே உணர்ச்சியினால் தூண்டப்பெற்றுச் செய்கின்றார்கள். மனித வாழ்க்கையிலே ஒற்றுமையின்மையும் பிணக்கும் ஏற்பட்டதற்குப் பிரதான காரணம் தலைவர்களுடைய சுயநல வேட்கை. தலைவர்களாக வருவோர் மக்களிடையே கீழ்த் தரமான உணர்ச்சிகளைத் தூண்டி வழிநடத்துகின்றார்கள். இதனால் மக்கள் கீழ்த்தர உணர்ச்சிகளுக்கு வசமாகிப் புரட்சி செய்கின்றார்கள். அகமாற்றம் ஏற்படாத இடத்து மக்கள் தவறான வழியிலேயே வழிநடத்தப்படுகின்றார்கள்.

நுண்ணறிவும் ஞானமும் படைத்த மனிதர்கள் பாராட்டத்தகுந்த ஓரளவுக்குச் சமயப்பிரிவினைகளையும் சாதி சமூகப் பிரிவினைகளையும் குறைத்துவிட்டார்கள். எனினும், இன்னும் வீண் அகந்தையினாலே பேரறிவும் அதிகாரமும் படைத்தமக்கள்சிலர், சாதி, சமய, சமூகப் பிரிவினைகளைப் பலப்படுத்த முயன்றுவருகின்றனர்.

புறமாற்றம் மனிதனை மனிதனாக வாழச் செய்யாது, மிருக நிலைக்கே இழுத்துச் செல்லுகின்றது.

அகமாற்றம் ஏற்படும் போதுதான் மனிதன் தான் இந்த உடம்பல்ல; தான் ஆத்மா என்பதை உணரத் தலைப்படுகின்றான். வாழ்க்கையின் இரகசியங்களுள் நுழைந்து ஆராய்ந்து அவ்வாராய்ச்சியால் ஆன்மாவின் இயல்பான மாட்சிமையையும் நித்தியத்துவத்தையும் அறிதலே அகமாற்றத்தின் முதற்படியாகும். ஆத்ம உணர்ச்சி ஆரவாரம் செய்யவேண்டிய ஒரு காரியமல்ல. அது ஆன்மாவுக்கும் இறைவனுக்கு முள்ள தொடர்பு. இறையுணர்ச்சியினாலே சுதந்திரத்தையும் இன்பத்தையும்பெற்று மேன்மைவாய்ந்த இறைவனுக்கும் தனக்குமுள்ள ஒருமையை உணர்ந்துகொள்ளும்படியாகத் தன்னை ஆக்கியோனிடம் அதிக அன்பு கொண்டிருத்தல் வேண்டும்.

ஞானமும், அன்பும், சேவையுணர்ச்சியும் மக்களிடையே அருகிவருகின்றது. காரணம் தலைவர்கள் என்று சொல்லப்படுவோர் இவற்றைத் தமது சுயநலத்திற்காகப் பயன்படுத்துகின்றமையே. தன்னலம் புறப் புரட்சிக்கு வழிகாட்டுகின்றது. பரநலம் அகப்புரட்சிக்கு வழி காட்டுகின்றது. புறப் புரட்சி மக்களுடையகீழ்த்தர உணர்ச்சிகளை தூண்டுகின்றது. அகப்புரட்சி கீழ்த்தர உணர்ச்சிகளைப் போக்கடித்து ஆத்மீக உணர்ச்சியைத் தூண்டுகின்றது.

திருவனந்த புரத்தில் இருந்து இன்று ஞானயாகம் செய்துவரும் சுவாமி அபேதானந்தபாரதி அவர்கள் மக்களிடையே ஒரு தீவிரமான அகப் புரட்சியை ஏற்படுத்திவருகின்றார்கள். ஆண்டவன் நாமம் ஒன்றைக்கொண்டே மக்கள் தெய்வீக நிலைக்கு உயர்ந்து வாழ்கின்றார்கள். ஆண்டவனுடைய ஒரு நாமத்திற்கே எவ்வளவு சக்தியுள்ளதென்பதை மக்களுடைய சொந்த அனுபவத்தில் உணரச்செய்துள்ளார்கள்.

மனிதன் பரந்தநோக்குடையனாகி, மனித வர்க்கம் முழுவதையும் ஒரு உன்னத தலைவனும் அதிகாரியுமாகிய ஒருவனிடமிருந்து தோன்றிய ஏகப்பொருளாகக் காணவேண்டும். சாந்தியும் ஒற்றுமையும் இங்கேயுண்டு. உலக ஒற்றுமையும் மனித வர்க்கம் முழுவதன் மகிழ்ச்சியும் இதிலேயுண்டு. இதனையே தெய்வீக வாழ்வு என்று பல மகான்கள் வாழ்ந்து காட்டி மறைந்துள்ளார்கள். பாமரரும் தெய்வீக வாழ்வு வாழலாம். அதற்கு ஆண்டவன் நாமம் ஒன்றேபோதும். அதற்கு நம்பிக்கையும் முயற்சியும் மக்களிடத்து நிலைபெறவேண்டும் என்பதை சுவாமி அபேதானந்த பாரதி அவர்கள் தமது உரை மூலம் விளக்குவதோடு தரிசனப் பெருமையாலும் உணர்த்துகின்றார்கள். வாழ்க அவர் தொண்டு.



---

ஓம்

## சுவாமி அபேதானந்தரின் அருள்மொழிகள்.

1 எல்லா உயிர்களும் இன்புற்று வாழ நினைப்பதுவே பக்தி.

2 அறிவுக்கு மேலான உணர்வே பக்தி.

3 ஞானம் புத்தியின் விசாகமானால் இதயத்தின் விகாசமே பக்தி.

4 ஞான வளர்ச்சியில் அகந்தை ஏற்படும் அகந்தை முற்றிலும் ஒழிவதே பக்தி.

5 கர்ம, ஞான, யோகங்களை விடச் சிரேஷ்டமானது பக்தி.

6 சுயநலம் கொஞ்சமுமின்றி பிறர்நலம் பேணுவது பக்தி.

7 தனதுபொறுப்பை இறைவனிடம் ஒப்படைப்பதே பக்தி.

8 கோபியர்களைப்போல தனக்காகவன்றி இறைவன் சுகத்திற்காகக்காட்டும் அன்பே பக்தி.

9 ஞான வைராக்கியங்களைப் பெற்றெடுத்த தாயே பக்தி.

10 ஜாதி, குல, தன. ரூப, வித்தைகளால் அபிமானமுற்ற நிலையே பக்தி.

# தத்துவப் பற்றைத் தளரவிடாதீர்!

## காந்திய பக்தர்களுக்கு வினோபாஜி வேண்டுகோள்.

நான் தமிழ் நாட்டில் யாத்திரை செய்த பொழுது அங்கேயுள்ள ஸ்ரீ சங்கராச்சாரியாரைக் காண நேர்ந்தது. அவர் முதியவர்; துறவி ஆனால். சில ஆண்டுகள் அந்தப் பீடத்தில் இருந்த பின் அவருக்கு அதையும் துறக்க வேண்டுமென்று தோன்றி இருந்தது. இதனால் சீடர் ஒருவரை அந்த ஆச்சாரிய பீடத்தில் அமர்த்திவிட்டு காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் இருந்து வந்தார். நான் அவரிடம் சென்றபொழுது, அவரிருந்த சிறு வீட்டில் ஒரு தண்ணீர்க்குடம். இரண்டு மூன்று புத்தகங்கள். சில ஆசனங்கள் ஆகியவை தவிர வேறு எதுவுமில்லை- அவர் வெளவாமை விரதம் பூண்டிருந்தார். பெரிய அறிஞர்: தமிழ் நாட்டில் அவருக்கு மிக்க மதிப்புண்டு. ஆயிரத்திநூறு ஆண்டுகளுக்குப் பிறகும் சங்கராச்சாரியரின் பீடத்தில் இத்தகையவர் இருப்பதைப் பார்த்து, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் இருந்துவரும் இத்தகைய ஸ்தாபனங்களின் அடிப்படை என்னவென்பது எனக்குத் தெரிய வந்தது. ஆனால், நாம் அமைக்கும் புதிய ஸ்தாபனங்கள் அற்பாயுள் உள்ளவைகளாய் நேற்றிருந்தவை இன்று இல்லாது மறைந்து போகின்றனவே, இது ஏன்?

## துயரம் தரும் விஷயம்.

ரவீந்திரநாத தாகூர் எவ்வளவோ உயரிய நோக்கங்கொண்டு எவ்வளவோ உற்சாகத்துடன் சாந்தி நிகேதனத்தைத் தொடங்கினார். ஆனால், இன்று ஒரு சாதாரண சர்வகலாசாலைக்கும் அதற்கும் வேற்றுமை எங்கே யிருக்கிறது? அங்கே ஓவியம் இசை முதலிய கலைகள் போதிக்கப்படுகின்றன; ஆனால் எல்லாம் ஏதோ யந்திரசாலையில் நடப்பதுபோன்றே நடந்து வருகின்றன, பண்டித மாளவியா நிறுவிய காசி சர்வகலாசாலையின் நிலை இப்பொழுது எப்படியிருக்கிறது? பாபூ நவகாளியில் ஒருதனி ''மிஷன்'' [சேவை ஸ்தாபனம்] தொடங்கியிருந்தார். அதுவும் இன்று போனவிடம் தெரியவில்லை; அது இப்பொழுது எதுவும் செய்வதாய்த் தெரியவில்லை. இதே வகையில் பாபூ தொடங்கிய பிறபணிகளிலும் தத்துவம் மூல ஊற்று சிறிது சிறிதாய் வற்றிவருவதைக் காண்கிறேன், இது எனக்கு மிக்க துயரத்தைத் தருகிறது.

இதன் காரணங்கள் பற்றி சிந்தித்தபொழுது எனக்கு இரண்டு மூன்று எண்ணங்கள் தோன்றின. அவற்றை நான் இப்பொழுது உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.



நம் ஸ்தாபனங்களின் ஜீவநாடி விரைவில் தளர்ந்து போவதற்கு, அவற்றில் ரத்தம் சுண்டிப்போவதற்குள்ளான ஒரு காரணம் நாம் கர்ம யோகத்தில் ஈடுபட்டிருப்பதாகும். கர்ம யோகத்தில் நன்மைகள் பல இருப்பதோடு தீமைகளும் உள்ளன. பசுப் பாதுகாப்பு அல்லது கோ சேவை செய்வதென்றால் பசுக்கள் மேய்வதற்கு புல்வெளி தேவையாகிறது. அதோடு மரித்த பசுக்களைப் பயன்படுத்துவதற்குத் தோல் பதனிடும் சாலை அமைக்கவேண்டி வருகிறது. இதோடு இணைந்தாய் நாட்டுச் செக்கையும். கதர் முதலிய பிற கிராமக் கைத்தொழில்களையும் ஆரம்பிக்கிறோம். இவற்வை யெல்லாம் நடத்த நாற்பத்தைம்பது பேர் தேவையாகிறது, இவ்வாறு வேலைகளின் பிரிவுகளும் அளவும் வளர வளர நம் தத்துவப் பற்று சிறிது சிறிதாய்க் குறைந்து போகிறது. சங்கராச்சாரியார் இராமானுஜாச்சாரியர், புத்தர், மகாவீரர் ஆகியோரின் சீடர்களிடம் காணப்பட்ட குறைகள் பலவற்றை நாமென்னவோ அகற்றிக்கொண்ட போதிலும். அவர்கள் ஆன்மா ஞானத்தின் அடித்தளத்திற்குச் சென்று பார்ப்பதைப் போல் நம்மால் செய்ய முடியவில்லை. இதனால் நம் காரியங்களெல்லாம் ஆங்கிலத்தில் ''Top heavy'! என்பார்களே அதுபோல், வெளிப் பார்வைக்குப் பிரமாதமாயிருந்தபோதிலும் உள்ளே தத்துவம் சிறிதும் காணக கிடைப்பதில்லை. இதனால் இவற்றைக் தோற்றுவித்த மனிதன் போன பின் ஸ்தாபனம் இருந்து வருகின்றதேயன்றி அதில் உயிரொளி காணப்படுவதில்லை. இதனால் நாம் வெளிப்பகட்டைக் கண்டு ஏமாறவும் உண்மைத் தத்துவத்தை அசட்டை செய்யவும் தொடங்கி விட்டோம்.

## அரசியலில் அலைக்கழிகிறோம்

பாபூ வாழ்க்கை, சமுதாயம் ஆகியவை பற்றிய சில தத்துவங்களை உருவாக்கினார். அவைகாரணமாக அவற்றில் அரசியலும் இயல்பாக இடம் பெற்றது. அவர் வாழ்க்கையில் அரசியல் முக்கியமல்ல, வாழ்க்கையை நேரிய முறையில் நடத்துகையில் அரசியலுடன், அரசாங்கத்துடன் ஓரளவு தொடர்பு ஏற்பட்டே தீரும் ஆகையால் அத் தொடர்பை வாழ்க்கைத் தத்துவங்களிலிருந்து சிறிதும் வழுவாது நடத்திக்கொண்டு போகும் வழிவகைகளை அவர் கண்டு நடத்திச் சென்றார். இதனால் அவர் நிர்மாணப் பணிகளின் மூலமே சுதந்திர இயக்கத்தையும் நடத்தினார். ஆனால் அவர் சென்ற பின் நாம் இப்பொழுது செய்து வருவதென்ன? நம் தத்துவப் பற்றின் மூலம் அரசியலை உருவாக்க வேண்டியது போய் அரசியலின் ஏவலின் படி நாம் நடக்கத் தொடங்கி விட்டோம். அரசியல் வெள்ளத்தில் மிதந்து அது செல்லும் திசையில்

சென்று கொண்டிருக்கிறோம். நம் தத்துவங்கள் பேச்சளவில் இருந்துவருகின்றனவேயன்றி, அவற்றினால்அரசியல்எவ்வகையிலும் பாதிக்கப்படுவதில்லை. இதற்கு மாறாக, அரசியலே நம்மை எப்படியெல்லாமோ ஆட்டிவைத்துக்கொண்டிருக்கிறது, காந்திவாதிகள், காந்தி பக்தர் எனப்படுவோர். இன்று காந்தி வழியிலல்ல நானா பர்னாவிஸ் வழியிலே சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே பிறரைத் திருத்த வேண்டியவர்களான நாமே வர வர வழிதவறிக் கெட்டுக்கொண்டிருக்கிறோம்.

காந்தியடிகளுக்கு, தத்துவங்களில் எவ்வளவு உறுதியிருந்தது என்பதை நாம் எண்ணிப்பார்ப்பதே இல்லை. ஒரு சமயம் ஒருவர் காந்திஜியிடம் நான் பசுப்பாதுகாப்பிற்கு என் வாழ்க்கையையே அளிக்க விரும்புகிறேன் என்றார். இதற்கு காந்திஜி, அப்படியானால் நீ பிரம்மசரியம் ஏற்க வேண்டியிருக்கும். பிரம்ம சரிய விரதமின்றி கோ-சேவை, பசுப்பாதுகாப்பு நடவாது என்றார். பாபூ இவ்வாறு ஒவ்வொரு விஷயத்திலும் அடித்தளத்திற்குச் சென்று பார்த்து வந்தார். என்பதை நாம் புரிந்து கொள்வதில்லை. பசுப் பாதுகாப்பு விஷயத்திலேயே பாபூ கூறியது எவ்வளவு முக்கியமான விஷயம், பெரிய விஷயமென்பது நமக்கு புரியவில்லை. மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில்பசுப்பாதுகாப்பிற்கும் பிரம்மசரியத்திற்கும் என்ன தொடர்பு என்றே நமக்குக் கேட்கத் தோன்றும். பாபூ இத்துடன் நிறுத்தாது. பாலருந்துவதனால் பிரம்மசரியம் பாழாகும் என்றும் சொல்லுவதுண்டு எல்லாம் விபரீதமாய் நடந்து வரும் இன்று நாம் தத்துவப் பற்றைப் பழுதுறாதுபாதுகாக்க வேண்டுமானால், எதைக் குறித்தும் ஆழ்ந்து சிந்தித்தல் அவசியம்.

## தத்துவப் பற்று அவசியம்.

நாம் பிரார்த்தனை யென்னவோ செய்கிறோம். ஆனால் பிரார்த்தனையினால். குழந்தைகளுக்கு நல்ல பயிற்சி' நல்ல பழக்கம் ஏற்படுகிறது. என்று எண்ணுவதோடு இருந்து வருகிறோம். சத்தியம் அஹிம்சை கருணை ஆகியவற்றில் நமக்கே இன்னும் போதிய பயிற்சியில்லை; பிரார்த்தனையினால் நமக்கு இப்பயிற்சி ஏற்படும் என்று நாம் எண்ணுவதில்லை; ஒரு தினசரிச் சடங்கு போல் நம் ஸ்தாபனங்களில் பிரார்த்தனை ஏதோ நடக்கிறதேயன்றி, அதன் மூலம் நம் பக்தி வெளியாகக் காணோம். வைணவர்கள் நண்பரைக் காணும்பொழுது, அவர்களுக்குண்டாகும் மகிழ்ச்சியில் ஒருவரையொருவர் கட்டிக்கொள்கிறார்கள். அந்த இன்பமும் உற்சாகமும் நமக்கில்லாமையால் நாம் செய்யும்



பிரார்த்தனைகளில் பக்தி உணர்ச்சி போதிய அளவு காணப்படவில்லை. ஆன்ம தத்துவம், விரத அனுஷ்டானம், கடவுள் வழிபாடு ஆகியவற்றை சங்கராச்சாரியார் பெரிதும் வற்புறுத்தி வந்தார். கர்மயோகத்தை அவ்வளவு வற்புறுத்தவில்லை இதற்கு மாறாக நாம் கர்யோகத்தை அதிகம் வற்புறுத்தியது சரியே; நாம் செய்த இத் திருத்தம் தேவையானதுதான், ஆனால், அவர் அனுபவத்திலிருந்து ஏற்று அனுஷ்டித்து வந்த ஒன்றை—தத்துவப்பற்றை—நாம் ஏற்க தவறி விட்டமையால் நாம் தொடங்கும் பணிகள் வேர்விடாமல் சிறிதுசிறிதாய் மங்கி மடிந்துவருகின்றன· நீங்களெல்லோரும் இது குறித்து யோசித்து இது உண்மையாயின் ஏற்றிடுவீராக

(கிராமராஜ்யம்)

ஓம்

## குருதேவா ஓம்.

குருதே வா,ஜய குருதேவா,
குரைகழல் நம,ஓம் குருதேவா!
அருள்வடி வாம்,ஜகத் குருதேவா,
ஆனந்த மோனசற் குருதேவா! (குரு)

அரிஹர, பிரம்ம குருதேவா,
அகிலசர் வேஸ்வர குருதேவா;
பரிவ்ரா ஜக,சிவ குருதேவா,
பரமக்ரு பாகர குருதேவா! (குரு)

பக்த ரட்சக குருதேவா,
பாப வீநாச குருதேவா;
சுத்த சுதந்த்ர குருதேவா,
ஜோதி சொரூப குருதேவா! (குரு)

சாரதை மோகன குருதேவா,
சக்தி மனோகர குருதேவா;
வீர நரேந்த்ர குருதேவா,
விமல சுரேந்த்ர குருதேவா (குரு)

பூரண ஞானசற் குருதேவா,
புகழவ தாரநற் குருதேவா;
ஸ்ரீரா மக்ருஷ்ண குருதேவா,
ஜயபர மஹம்ஸ குருதேவா! [குரு]

'பரமஹம்ஸதாசன்'

# யோக ஆசனங்கள்


S.A.P. சிவலிங்கம்-சேலம்

## 65; அர்த்த திரிகோணாசனம்.

### பழகும் விதம்

காற்றோட்டமானதும், சுத்தமானதுமான சமதள விரிப்பின் மேல் கால்கள் இரண்டையும் அகட்டிய வாறு நின்றுகொள்ளவும்.

கைகள் இரண்டையும் பக்கவாட்டில் தோள் பட்டைக்குச் சமமாக நேராக நீட்டிவைத்துக் கொள்ளவும். சுவாசத்தைவெளிவிட்ட வாறே கைகளையும் நீட்டிய வாறே மெதுவாக இடதுபக்கமாய்க்குனிந்து இடது பாத கணுக்காலை இடதுகையால் தொடவும் வலது கைமேல் நோக்கியும், உள்ளங் கை திருப்பியும் வைத்திருக்கவேண்டும். தலை மேல் நோக்கிய வாறு திருப்பி வலதுகையைப்பார்த்த வாறிருக்க வேண்டும். கால்கள் இரண்டும் விறைப்பாய் இருக்கவேண்டும். இவ்வாறு குனிந்திருக்கும் நிலையில் சுவாசம் விட்டும், உள்ளிழுத்தும் செய்யவும். தேவைக்குத் தக்கவாறு இருந்தபின் ஆசனத்தைக்கலைத்து மற்றவலதுகாலிலும் இவ்வாறு மாற்றி பயிலவும். சித்திரம் 65 பார்க்கவும்.






## ஆசனத்தைக் கலைத்தல்

கணுக்காலைத் தொட்டிருக்கும் கையை எடுத்து சுவாசத்தை உள்ளிழுத்தவாறே நிமிரவும். கைகள் இரண்டையும் நேராய்க் கொண்டுவந்து வைத்து, கால்களையும் ஒன்றுசேர்த்து சிரமபரிகாரம் செய்து கொள்ளவும்: உடலுக்குத் தக்கவாறு நான்கு தடவைகள் வீதம் உயர்த்திக் கொண்டு செல்லலாம். மிகவும் மெலிந்தவர்கள் அதிகம் செய்யலாகா.

**பலன்கள்:-** முதுகெலும்பு, இடுப்பு, கால்கள், கைகள் இவைகளுக்கு வலுவையும், வயிற்றின் ஊழச் சதைகளையும் போக்குகின்றது. புஜங்கள் வீரியப்படும். நல்லபசி எடுக்கும். கழுத்து திருப்பியிருப்பதால் அந்த நரம்புகளுக்கு நல்ல இரத்தோட்டத்தைக் கொடுக்கின்றது.

ஆஸ்த்துமா, அதிக ஜன்னி, கழுத்தில் கட்டிபோன்ற வியாதிகளை குணமாக்கும். ஆண், பெண் அனைவரும்செய்யலாம். ஆனால் பெண்மணிகள் கற்பகால, மாத விடாய் ருதுகாலங்கள் தவிர மற்ற நாட்களில் செய்யலாம்.

## 66, பூரண திரிகோணாசனம்

### [பழகும் விதம்]

காற்றோட்டமானதும், சுத்தமானதுமான இடத்தில் சமதள விரிப்பின்மேல் கால்கள் இரண்டையும் சிறிது அகட்டி நேராய்நின்று கொள்ளவும். கைகள் இரண்டையும் பக்கவாட்டில் இடது, வலப்பக்கமாய் தோள்பட்டைக்குச் சமமாகத் தூக்கி நீட்டிவைத்துக் கொள்ளவும்.


பின் சுவாசத்தைச் சிறிது, சிறிதாக வெளிவிட்டவாறே சற்று முன்புறமாகக் குனிந்து முதுகைவலப் பக்கமாய்த் திருப்பி, இடதுகையால் வலது பாதக் கணுக்காலின் முஷ்டியைத் தொடவும், சுவாசம் இங்கு சமநிலையில் உள்ளிழுத்து வெளிவிடவும். மிகவும் மெலிந்தவர்கள் அதி தீவிரமாக சுவாசத்தை நான்கைந்து தடவை உள்ளிழுத்து வெளி விடவும்.

வலதுகைமேல்நோக்கி, முகத்தின் பார்வை வலது கையைப் பார்த்திருக்கவேண்டும். கால்கள் இரண்டும் விறைப்பாய் வளையாமல் கீழே வைத்திருக்கவும்.

கால்களின் பாதவிரல்கள் முன்பக்கமாக இருக்க வேண்டும். சித்திரம் 66-பார்க்கவும். கைகள் வளையவும் கூடாது. இந்நிலையில் தேவைக்குத் தக்கவாறு இருந்தபின் மற்ற இடதுகாலையும் இவ்வாறு மாற்றிச் செய்யவும்.

## ஆசனத்தைக் கலைத்தல்

வலது காலைத் தொட்டிருக்கும் இடது கையை எடுத்துச் சுவாசத்தை உள்ளிளுத்துக் கொண்டே முதுகை நேராய்நிமிர்த்தி பின் நின்று கைகள் இரண்டையும் ஒன்று சேர்த்து அதாவது சாதாரணமாய் தொங்க விட்டு கால்களையும் ஒன்று சேர்த்துச் சிரமபரிகாரம் செய்துகொள்ளவும்.



பலன்கள்:– முதுகு நன்ருகத் திருப்பப்பட்டிருப்பதால் அவற்றிற்கு நல்ல இரத்தோட்டமும். எலும்புக்கு இளமையும், கைகால்களுக்கு வலுவையும் கொடுக்கும். வயிற்றின் ஊழச்சதையை அறவே நீக்கும். பசி நன்ருக எடுத்து அஜீரணம், புளியேப்பம் முதலியவற்றை நீக்கும். ஆண், பெண் அனைவரும் செய்யலாம். பெண்மணிகள் கெற்பகாலம், மாதவிடாய் ருது காலங்கள் தவிர்த்து மற்ற நாட்களில் செய்யலாம். கண்டமாலை காது சம்பந்தப்பட்ட வியாதிகள், ஜன்னி, காக்காய் வலிப்பு, ஆஸ்த்துமா முதலிய பல வியாதிகளைக் குணமாக்கும்.

——

# இறைவழிபாடு.

(ஹரிஹர கிருஷ்ணமூர்த்தி
இந்தியா

அன்பும், அருள்நெறியும் நாட்டினில் நல்லனகாண துணைபுரியும் சாதனங்களாம். இவ்விரண்டும் மக்களிடம் நிலைபெறவேண்டும். மனிதன் பாவங்களினின்றும் விலகி இருக்கும் நேரம் மிகக் குறுகிய காலமாகும். இக்குறுகிய காலத்திற்குள் தன் வாழ்வைச் செம்மை பெறச் செய்து கொள்பவனே சிறந்தவன் ஆகின்ருன் அவனே கடவுட் தன்மையும் அடைகின்ருன். ஆனல் மனிதன் பாவங்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கும் நேரமோ நீண்டதாக இருக்கிறது. அந்நீண்டகாலத்தில் தான் நல்லனவற்றை விடுத்து தீய செயல்களைச்செய்து பாவமூட்டையை தன்மீது சுமந்துகொண்டு வாழ்கின்ருன். இந் நிலை மாறி நல்லவை, தீயவை, பாவம், புண்ணியம் என்பனவற்றை நன்கு அறிந்து வாழ வேண்டும். அப்படி வாழ முற்படுபவர்தான் எல்லா வல்ல இறைவனை அடையமுடியும்

இறைவன் அருள் ஒளியைப் பெறுவதற்கு உதவக்கூடிய சாதனங்கள் இரண்டு. ஒன்று கோயில், மற்ருென்று வழிபாடு அல்லது பிரார்த்தனை. பூமியின் அடியில் தண்ணீர் இருப்பதை யாவரும் நன்கு அறிவோம்: ஆனல் அத்தண்ணீரைப் பெறுவதற்கு நாம் நினைத்த இடத்தில் மண்ணைத்தோண்டி தண்ணீரை எடுப்பதில்லை. குறிப்பிட்ட ஓர்இடத்தில் மண்ணைத்தோண்டி அதற்கு கிணறுஎன்ற பெயரைக் கொடுத்து நீரைப்பெறுகின்ருேம். அதுபோலபரந்தஉலகில் இறைவன் இல்லாத இடமே ஒன்றும் இல்லை. இறைவனின் சக்தி எங்கும் பரவி இருப்பினும் அதை ஓர்குறிப்பிட்ட இடத்தின் மூலம் காண முற்படுவதே சிறந்தது எனக் கண்ட நம் முன்னேர் கோயில் என்ற ஒன்றைத் தோற்றுவித்தனர். அதன்மூலம் கடவுளையடைய முற்பட்டனர். அக்கோயில்களில் கற்களில் பல்வேறு உருவங்கள் செதுக்கி அவற்றைப் புனிதப்படுத்தி அதன் மூலம் இறைவனைக்கண்டனர். ஆனல் இன்று கல்லிலா இறைவன் இருக்கின்ருன்? கல்லிற்குச் சக்தி உண்டா? என்ற கேள்வி நிலைக்குப்பகுத்தறிவு வளர்ந்து விட்டது. மிக்க ஒளியையும், உஷ்ணத்தையும் உடைய சூரியனல் பூமியின்மீது கிடக்கும் ஓர் காகிதத்தை எரித்துவிடக்கூடிய சக்தி இல்லை. ஆனல் அவ் வொளிக்கு முன் அரையணு விலையுள்ள பூதக்கண்ணுடியை காகிதத்திற்குமுன் பிடித்தால் அது தீப்பற்றி எரிந்துவிடுகிறது. காரணம் என்ன? சூரியஒளியைப் பெற்று அதனை ஒரு முகப்படுத்தி அதன் சக்தியால் காகிதத்தை எரியச் செய்கிறது கண்ணுடி. மிகப்பெரிய சூரியனுக்கு இல்லாத சக்தி கண்ணுடிக்கு இருப்பதுபோன்று மிகப்பெரிய சக்தியால் இருக்கும் இறைவனை நேரடியாய் அடைவதுஎன்பது இயலாத காரியம். எப்படித் தன்னல் எரிக்க முடியாத பொருளை லென்ஸினல் எரிய வைக்கின்றதோ அதுபோல நாமும் சர்வ சக்திவாய்ந்தஇறைவனை அடைய விரும்பின் லென்ஸைப்போன்ற சக்திவாய்ந்தவிக்கிரகங்களின்மூலம்தான் அடையமுடியும். இதனை நன்கு உணர்தல் அவசியமாகும்,

இறைவனின்றி உலகில் ஒரு காரியமும் நடைபெறா. உலகம் என்பது இறைவன் உடைமை என்பதை அறிதல்வேண்டும். மேகம் இல்லாமல் மழை என்பது இல்லை. வயல் இல்லாமல் விளைவு இல்லை. பசு இல்லாமல் கன்று இல்லை. ஞாயிறு இல்லாமல் வெளிச்சமில்லை. அரசன் இல்லாமல் காவலில்லை. தாயில்லாமல் மக்களில்லை. இவைபோல இறைவனில்லாமல் உலகம் இல்லையாம்.

வானின்றி மழையுமில்லை வயலின்றி விளைவுமில்லை
ஆனின்றிக் கன்றுமில்லை அரியின்றி யொளியுமில்லை
கோனின்றிக் காவலில்லை குமரர் தாயின்றியில்லை
மேனின்ற கடவுளின்றி மேதினியில்லை மாதோ.

என்ற பாடலின்மூலம் நன்கு அறியலாம். நிற்க இத்துணை சக்தி வாய்ந்த இறைவனை கோயில்சென்று வணங்குவது ஓர் முறையாம். வழிபாடு என்பது இறைவனை மனத்தின்கண் இருத்தி அவனது திருநாமங்களை வாயால் புகழ்ந்து பாடுவது. இவ்வழிபாடு எங்கும் எப்பொழுதும் நடைபெறலாம். உலகில் உள்ள இன்பங்கள் அனைத்திலும் சிறந்த இன்பம் இறைவனை வழிபட்டு அவனது திருநாமங்களைப் பலவாறு உச்சரிப்பதேயாம்,

வழிபாடு செய்யும்பொழுது கோயில் சென்று செய்வது நல்லதா, அல்லது வீட்டில் இருந்துகொண்டு தனிமையில் செய்வது நல்லதா? எனக்கேட்கின்றனர். இரண்டும் சிறந்ததாகக் கருதப்படினும் கோயில் சென்று கூட்டத்தினருடன் வழிபடுவதே சிறந்ததாம். ஒரு பையன் பள்ளியில் படிக்காமல் வீட்டிலேயே கல்வி கற்றால் அவனுக்கு அறிவு வளர்ச்சியடையாது. பள்ளிசென்று மற்றைய மாணவர்களுடன்சேர்ந்து அவர்களுடன் ஒருவனாக இருந்து கல்விகற்கும்பொழுதுகல்வியறிவுவளர்ச்சியடைகின்றது. அங்குகற்ற கல்வியை அத்துடன்நிறுத்திவிடாமல் வீட்டிலும் வந்து படிக்க வேண்டும். இப்படி பள்ளியில் அனைவருக்கு மத்தியிலும், வீட்டில் தனிமையிலும் கற்கும் கல்வியறிவு சிறந்த பலனைத் தருகிறது. இரண்டில் ஒன்றைக் கைவிடின் பலன் கிட்டாது. அதுபோலகூட்டு வழிபாடும் அவசியம். தனிவழிபாடும் அவசியம். இரண்டும்தொடர்ந்து நடைபெறவேண்டும்.

வழிபடுவதற்குமுன் நாம் இரண்டினைக் கைக்கொள்ள வேண்டும். அவ் இரண்டினுள் ஒன்றைவிடினும் நாம் எவ்வளவு வழி பட்டாலும் பலன் இல்லை. இறைவனைக் காணவும் இயலாது- ஒன்று புற உலகத்தைப்பற்றிய எண்ணங்களை அகத்தினுள் இறைஒளியை ஏற்றி நிறுத்தவேண்டும். அத்துடன் மனமும் இறைவனுடன் ஒன்றுபடவேண்டும். ஆஞ்சநேயர் ஸ்ரீ இராம பிரானுடைய நாமத்தை உச்சரித்தது மட்டும் அல்லாமல் எப்பொழுதும் அகத்தினுள் இராமனையே வைத்திருந்தமையால் கடலைத் தாண்டவும்' மலையைத் தூக்கவும் முடிந்தது.



வழிபாட்டால் சாதிக்கக்கூடாதது ஒன்றுமில்லை. ஆங்கிலக்கவி டெனிஸன் 'நாம் கனவிலும் கருதவொண்ணாத அளவிற்குமேல்காரியங்களை பிரார்த்தனையால் (வழிபாட்டால்) சாதிக்கலாம் எனக் கூறுகின்றார். மகாத்மா காந்தியடிகள், என்னால் பலநாள் உணவு இல்லாமல் பட்டினி கிடக்கமுடியும். ஆனால் பிரார்த்தனை இல்லாமல் ஓர்நாள்கூட இருக்கமுடியாது. வாழ்க்கை அரங்கத்தில் அறிவு நம்மைச்சிறிது தூரம் அழைத்துச் செல்லும். ஆனால் ஈசுவர சகதியானது வெகுதூரம் அழைத்துச் செல்கின்றது என்று கூறுகின்றார்.

வழிபாட்டின்மூலம் பலன்கிட்டவில்லை என்றால் இறைவனிடமிருந்து நாம் வெகுதூரம் விலகியுள்ளோம் என்பதை நன்குஅறிதல் அவசியம். பிரார்த்தனை செய்தும் மனத்தில் இறைஒளி உண்டாகவில்லை என்கின்றனர் சிலர், இரும்புத்துண்டு ஒன்றை காந்தத்தின் அருகில் கொண்டு செல்லும்பொழுது அக்காந்தம் இரும்பை இழுத்துக்கொள்கிறது. காந்தத்துடன் ஒட்டிய இரும்பு பின் தானாகவே காந்தமாகி விடுகின்றது. அதுபோல பிரார்த்திப்பவன் கடவுளை நெருங்குகின்றான். பிரார்த்தனை அதிகமாக அதிகமாக இறைவனை மிக நெருங்கி விடுகின்றான். அப்பொழுது அவன்தானே இறைவனால் இழுக்கப்பட்டு ஐக்கியம் ஆகிவிடுகின்றான். இரும்புத் துண்டு காந்தமானதுபோன்று.

இறைவன் அருள்பெற்று வாழ்வோமாயின் உலகமெல்லாம் நம்மைப் பகைத்தாலும் துன்பம் உண்டாகாது. அதன் அருள் இல்லாவிட்டால்நால்வகைப்படைஇருப்பினும் நாம்தப்புதல்முடியாது.

பாரெலாம் பகைசெய்தாலும் பராபரன் கருணையுண்டேல்
சாருமோர் துயருமுண்டோ தாயினு மினியவையன்
சீரருளின்றே லெண்ணி றேர் கரி பரிப தாதி,
பேரணியுடையேமேலும் பிழைக்குமாறெவன்கொ னெஞ்சே.

இக்கருத்தினைப் போன்று வான்புகழ் வள்ளுவரும்,இறைவனது புகழைப்பாடி அவனை அடைய விரும்புகின்றவர்களை நல்வினை தீவினை ஆகிய இரண்டும் வந்தடையாது என்பதை

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு என்று கூறுகின்றார்

பறவைகள் பறப்பதற்கு அதன் இரு இறகுகளும் பயன்படுகின்றன. அவ்இறகில்ஒன்றுபயன்படாமல் போயின் பறவை பறப்பது தடைப்படும். அதுபோல இறைவனை அடைய மனிதனுக்குக்கொடுக்கப்பட்ட இறகுகள் இரண்டாம். ஒன்று கோவில். மற்றொன்று வழிபாடு. இவ்விரண்டும் இறைவன் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்லும் சாதனங்களாம், இவற்றில் ஒன்றைக் கைவிடின் பறவைக்கு ஒரு இறகு இல்லாவிடின் பறப்பது தடைப்படுவது போன்று இறைவனை நாம் சென்று அடைதலும் தடைப்படும் என்பதில் சந்தேகமில்லை,

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடு வாழ்வார்,**

——

# "பேதப் பிணக்கறுத்த அபேதன்."

—(சுகப்பிரம்மம்)—

நண்பர்களே! இன்று உலகத்தில் மனிதசமூகம் பலவிதமான துன்பங்களையனுபவித்து வருகிறது. அதற்கு இவர்களுக்குள்ளேயேயிருக்கும் பேதபுத்தியேதான் காரணம். பேதபுத்திதான் உலகஞானம். அபேத நிலைதான் ஆத்ம ஞானம். வேறுபட்ட உலகத்தில் ஒன்றாயுள்ள ஆத்மாவை அறிவதே பக்தி ஞானம் முதலிய சாதனங்களின் குறிக்கோள். ஓர் சிறந்த பக்தர், [நாராயணபட்டதிரி], தன்னுடைய "**துதிநூலான**" நாராயணீயம் என்ற [பாகவதச் சுருக்கம்] நூலின் இவ்வண்ணம் பிரார்த்திக்கிறார். எல்லா உயிர்களிடத்திலும், நீயே இருக்கிறாய் என்ற எண்ணத்துடன் நான் இருந்துகொண்டு, உன்னிடத்தில் பக்தியும் உன் அடியார்களிடம் அன்பும், பக்தியின் மஹிமை அறியாதவர்களிடம் தயவும், [கருணைமனப்பான்மையும்] எதிர்ப்பவர்களிடம் உதாசீன புத்தியும் பூண்டு, தாவரஜங்கமான உலகப்பொருள் அனைத்தையும் உன்னுடைய வடிவமாகநினைத்துவணங்குவேன். என்று பிரார்த்திக்கிறார். சிவஞானத்தை உலகத்திற்கு அருளிய 'திருஞானசம்பந்தப் பெருமானைக்குறிப்பிடும்போது பெரியபுராணத்திலும், சேக்கிழார் ஸ்வாமிகள் [தாவில் சராசர மெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ்செய்தார் என்று குறிப்பிடுகிறார் ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமானும் எனக்கு எப்போது குருதரிசனம்கிடைக்கும்; குருவருளால்தான் பேதம் ஒழியும் என்று வேண்டுகிறார்.

***'வேதவாகமச் சென்னியில் வினைபொருள்,' அபேதம்***

***'பேதமாகிய பிணக்கறுத்தி யிருட்பிணியவிழ்த்து,***
***நாதனாகிய தன்னையும் என்னையும் நல்கும்***
***போதனாகிய குருபரன்வருவது எப்பொழுதால்"***

மேலே கூறியுள்ள அபேத நிலை நம் ***ஸ்ரீ அபேதானந்த ஸ்வாமிகளிடம்*** குடிகொண்டிருக்கிறது. அங்கு ஆச்சிரமத்திற்குப் போனவர்களுக்கும் ஸ்ரீ ஸ்வாமியின் அன்பிற்கும் அருளுக்கும் பாத்திரமானவர்களுக்கும், இந்த அபேதானந்



தம் கிடைக்கிறது. பல ஊர்களிலிருந்தும் பல தொழிலும் பல இயல்பும, பலகுணமும் கொண்டவாகள் இங்கு கூறுகிறார்கள். இங்கு சேர்ந்தபிறகு எல்லாரும் ஒரே உணர்ச்சியுடன் இருக்கிறார்கள். இனபுறுகிறார்கள். இதே நிலை இன்று உலகிலுள்ள எல்லா சம்பிரதாயவாதிகளிடமும் வந்துவிட்டால் நாடு பொன்னாடாக மாறிவிடும். இந்த வேற்றுமையற்ற பேரின்பம், 'நாமசங்கீர்த்தனம்' என்ற தர்மத்தில்தான் விளங்குகிறது.

**'யாமோதிய கல்வியும் எம்மறிவும்**
**தாமேபெற வேலவர் தந்ததினால்**
**பூமேன்மயல் போய்அறமெய்யுணர்வீர்**
**நாமேன் நடவீர் நடவீர்இனியே.**

---

## கடமை

—✻—

கடமையை நிறைவேற்றிவிட்டதாகப் பெருமை கொண்டாடுவது கடனைக் கொடுத்துவிட்டுநன்கொடைகொடுத்ததாக எண்ணிச்கொள்வது போன்றதாகும்.

கடமையை நிறைவேற்றினால் உரிமை தானாக வந்து சேரும் கடமையை நிறைவேற்றாமல் உரிமையை நாடினால் அது மாயமாய்க் கைக்கு அகப்படாமல் போய்க்கொண்டேயிருக்கும். இதுதான் "செயல் ஆற்றவே உனக்கு உரிமை" என்னும் கிருஷ்ணனுடைய இதோபதேசமாகும்.

மனிதன் உரிமையை இழக்கச்சம்மதிக்கலாம். கடமையைநிறைவேற்றா திருக்கலாகாது.

பிறர்க்குத் தவறாகத் தோன்றினும் தனக்குச் சரியாகத் தோன்றுவதைச்செய்வதே கடமையை நிறைவேற்றுவதற்கான சரியான மார்க்கம்.

கடமையை நிறைவேற்றினால் உரிமை கிடைக்கும். ஆனால் உரிமையை எண்ணிக் கடமையை நிறைவேற்றினால் கடமையும் சரியாக நிறைவேற்றப்படமாட்டாது. உரிமையும் கிடைக்கமாட்டாது. கிடைத்தாலும் நன்மைதராமல் வெறும் பாரமாகவே இருக்கும்.

உண்மையில் கடமையைச் செய்வதற்குரிய உரிமையே எந்த உரிமைக்காக உயிர்வாழ்வதும் உயிர் துறப்பதும் தக்கதோ அந்த உரிமையாகும்.

—காந்தி.

- ஓம் -

# வானொலி யாருக

(சி. இலக்குமி)

திருகோணமலை. திவ்ய ஜீவனசங்கத் தபோவனம் கைவல்ய குடீரத்திற்குச் செல்வதென்றால், குழந்தைகளுக்குத் தனித்தோர் குதுகலம்: ஏன்? பெரியவர்களுக்கும் குதுகலமே; அன்புருவாகிய யோகிராஜின்முன். எல்லோருமே குழந்தைகள் ஆகிவிடுகின்றோம்.

1955-ம் வருடம் கார்த்திகை மீ, சனிக்கிழமை என்று ஞாபகம். ஸ்ரீ சண்முக வித்தியாலயக் குழந்தைகள் சிலர், கைவல்ய குடீரத்தை நாடிச் சென்றோம். யோகிராஜ் காலமண்டபத்திற் காட்சியளித்தார். அதுதான் தபோவனத்தின் பிரார்த்தனை மண்டபம்; அன்று எமது சம்பாஷணை கலாமண்டபத்திலேயே ஆரம்பமாயிற்று.

குழந்தைகள்: கடவுள் எங்கே இருக்கிறார்?

யோகிராஜ்: எங்கும் இருக்கிறார்.

குழந்தைகள்: எங்கும் இருக்கும் இறைவனைக் காணமுடியவில்லையே.

யோகிராஜ்: வாஸ்தவந்தான்; இந்த இடத்தில். இனிமையான காம்போதி இராகம் கேட்கிறது; உங்களுக்குக் கேட்கவில்லையா?

ஒருவர்: பாடுபவர் ஒருவரையும் காணோமே! காம்போதி ராகம் எப்படிக் கேட்கும்?

யோகிராஜ்: பாடுபவர் எங்கேயிருக்கிறார்? எப்படியிருக்கிறார்? என்பது பிரச்சனையல்ல இராகம் கேட்கிறதா? இல்லையா? நன்கு கவனித்துக் கூறுங்கள்.

பிள்ளைகள்: மௌனமாகச் சில நிமிஷம் இருந்தனர் பின் எல்லோரும் ''சங்கீதம் எங்கள்காதிற்குக் கேட்கவே இல்லை.''



யோகிராஜ்: இப்போது எல்லோர் காதிலும் சங்கீதம் கேட்கப் போகிறது. என்னுடன் வாருங்கள் என்று கூறி எழுந்து நடந்தார்; சுவாமிஜியைப் பின் தொடர்ந்தோம். கைவல்ய குடீரத்தை அடைந்தோம். சங்கீதம் கேட்கிறதா? என்றார். [பழைய பல்லவிதான் பாடினோம்] இல்லை யென்றோம்........ ஆனால், அடுத்த கணமே இனியதோர் கீதம்கேட்டது. நாம் ஆச்சரியப் படவில்லை ஏன்? அது வானொலிப் பெட்டியிலிருந்து பெற்ற இசை: ஆனால் யோகிராஜ் அந்த வானொலியிலிருந்து அதிசயமான தத்துவக் கருத்தை விளக்கினார்.

யோகிராஜ்: இப்போது சங்கீதம் கேட்கிறதா?

குழந்தைகள்: ஆம். கேட்கிறது.

யோகிராஜ்: எங்கிருந்து கேட்கிறது?

குழந்தைகள்: வானொலிப் பெட்டியிற் கேட்கிறது.

யோகிராஜ்; வானொலிப் பெட்டிக்குட் பாடகர் இருக்கிறாரா?

குழந்தைகள்: இல்லை. எங்கோ இருந்து ஒருவர் பாடுகிறார் அந்தச் சத்தத்தைக் கிறகித்து எமக்குத் தருகிறது வானொலிப் பெட்டி

யோகிராஜ்: பாடகரின் சங்கீத ஒலி. வானத்திற் தானே ஒலியலையாகப் பரவி நிற்கிறது

குழந்தைகள்: ஆம், பாடிய வானொலி நிறுத்தப்பட்டது.

யோகிராஜ்; இப்போது பாட்டுக் கேட்கிறதா?

குரந்தைகள்; இல்லை,

யோகிராஜ்: இந்த இடத்தில் [வானத்தில்] சங்கீத ஒலி உண்டா? இல்லையா?

குழந்தைகள்: உண்டு.

யோகிராஜ்: அப்படியானால் ஏன், சங்கீதம் கேட்கவில்லை.

குழந்தைகள்: வானொலி இயங்கவில்லை அதனாற் சங்கீதம் கேட்கவில்லை.

யோகிராஜ்: சங்கீதம் இந்த இடத்தில் இருந்துகொண்டே இருக்கிறது. வானொலி இயங்காதபோது, அது கேட்கவில்லை. இயங்கும்போது கேட்கிறது. இதுபோன்றதே தெய்வ சக்திக்கும் நமக்குமுள்ள தொடர்பு.

இறைவன் எங்கும் இருக்கிறார். அவரைக் காண வேண்டுமாயின் நாம் வானொலி பெட்டியாக மாறவேண்டும். அப்போது கடவுளைக் காண முடியும். கடவுளின் அருள் மொழிகளைக் கேட்க முடியும்.

ஒருவர்: நாம் வானொலிப் பெட்டியாவது எப்படி?

யோகிராஜ்: ஆத்மீக வாழ்விற்குச் சிறந்த சாதனை வேண்டும், உடலும் மனமும் இறைவனைக் காணுதற்குத் துணையாகும் கருவிகள் யோக சாதனைகளால் அவற்றைப் பயன் படுத்த முடியும். இமயம், நியமம் ஆசனம், பிராணாயமம், தாரணை தியானம், சமாதி, பிரத்தியாகாரம், என்ற அட்டயோக சாதனைகளைச் செய்தல் வேண்டும். அவற்றால் ஒரு முகப்பட்ட தூய உள்ளம். ஈசனைக் கண்டு இன்புறும், யோக மார்க்க மன்றிப் பக்தி மார்க்கமும் இறைவனைக் காணச் செய்யும் யோக மார்க்கம் வானொலிப் பெட்டியை நன்கு உபயோகிக்கத் தெரிந்தவரை ஒக்கும்; பக்தி மார்க்கம், விபரம் தெரியாத ஒருவர் வானொலியை இயக்குவதை ஒக்கும். வானொலியின் விபரம் தெரிந்தவர் சென்னை நிலையம் எது? திருச்சி நிலையம் எது? கொழும்பு நிலையம் எது? என்று நன்கு அறிவர் வேண்டிய நேரம் வேண்டிய நிலையத்தில் விஷயத்தைத் தாமத மின்றி வானொலியை இயக்கிக் கேட்டுக் கொள்வர். யோக சாதனையிற் சிறந்தவரும் உடலினதும், உள்ளத்திலும் பண்பையறிந்து ஏற்ற வகையில் இயக்கி தெய்வீக சக்தியைப் பெற்று ஆனந்தம் அடைவர்.



வானொலி விபரம் அறியாதார், பாடுகின்ற நிலையம் எதுவெனத் திட்டமாக அறியார், அதனால், நிதானமின்றிப் பல இடத்தும் வானொலியை இபக்குவர்; ஏதாவது அர்த்த மற்ற சத்தம் இடையிடையே கேட்கும். சத்தம் கேளாமலும் போகும். மனம் சோராது, இயக்கிக்கொண்டே இருப்பின் திடீரென்று இனிய கானம் கேட்கலாம். அந்த இடத்தில் அசைவின்றி நிறுத்திவிட்டால், சங்கீதம் கேட்குமல்லவா? அப்படிப் பக்தி மார்க்கத் தார்க்கும், ஒருநாள் தெய்வ தரிசனம் கிடைக்கவே கிடைக்கும்; கிடைக்கும் தெய்வீக சக்தியை நிதானமாக, கவனமாகக் பற்றிக் கொள்ளல் வேண்டும். யோக மார்க்கமானாலும் ஏன், பக்தி மார்க்கமானாலுமென், தெய்வீக சக்தியைப் பெறுவதற்கு உள்ளமும் உடலும், தூய்மையுற்று விளங்க வேண்டும். ஆசாபாசகக் கறள்கள் இன்றிக் களங்கமற்று இருத்தல் வேண்டும்; தகுதியுள்ள வானொலியாகும் போது, இறைவனைக் காணமுடிகிறது.

அன்று சற்குருவின் உபதேசம் நாம் பேரானந்த அலையைக் கிரகிக்கும் வானொலியாக வேண்டும். அதனால் நித்திய ஆனந்த சங்கீர்த்தனத்தை அனுபவத்தில் வேண்டும், என்ற வாஞ்சையை உள்ளத்தில் வருவித்தது குதூகலித்த உள்ளத்துடன் தந்தையின் தாள் தாழ்ந்து, பணிந்து விடை பெற்றுச் சென்றோம்.

# கடமை

பிறர் கடமையை நன்கு செய்பவன் தன் கடமையை அரை குறையாகச் செய்யினும் பாதகமில்லை. அதுவே நல்லது. —வேதம்.

கடமையைச் செய்பவனே பூரணம் அடைகின்றான். —பகவத்கீதை.

கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு. —வள்ளுவர்.

வெற்றியை விட்டுக் கடமையையே முதன்மையாகக் கொண்டால், அது சால்பு தருமன்றோ? செய்ய வேண்டிய கடமை செய்மையில் இல்லை. அணித்தே உளது. —கன்பூஷியமதம்.

செய்யவேண்டியகடமை அண்மையில் இருக்க மக்கள் சேய்மையிலேயே தேடுகின்றனர். —ஷின்டோமதம்.

எல்லோரிடமும் நட்புகொள்க. அதுவே உன் இயல்பு. அவரை அறநெறியில் நிற்கச்செய்க. அதுவே உன் அறிவு. அவரை உன்னைப் போலவே கருதுக, அதுவே உன் மதம் அவரால இன்பம் அடைவாய், அதுவே உன் ஆன்மா. —ஜாரதுஷ்டிரர்வாக்கு.

கடவுளை அஞ்சி அவர் கட்டளைகளை நிறைவேற்றுவாய். இதில் மனிதனுடைய கடமைமுழுவதும் அடங்கும்- இம்மையில் கடமை செய்வோர் மறுமையில் கதி அடைவர். —எபிரேயமதம்.

## வேதம்

வேதத்தை விட்ட அறமில்லை, வேதத்தின்
ஓதத்தகும் அறம்எல்லாம் உள,தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை யோதியே வீடு பெற்றார்களே.
—திருமூலர்

## வேதாந்தம்.

வேதாந்தமாவது வேட்கை ஒளிந்திடம்
வேதாந்தம் கேட்டவர் வேட்கை விட்டாரே.
—திருமூலர்

# பாரதப்பண்பாடு.

## (தெய்வ பக்தியும் - சமயவழிபாடும்)

**நாம்** வசிக்கும் பாரத தேசம் புண்ணியபூமி. மனிதசமூகம் முதலில் வளர்ச்சிகண்டு, நாகரிகம் அடைந்தது இந் நாட்டில்தான். நாம் இன்று வாழ்வது சுதந்திர பாரதத்தில். எல்லாவகைகளிலும் அதைச்சிறப்பிப்பது மக்களாகிய நமது கடமை. பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானில் நனிசிறந்தனவே என்பது ஆன்றோர் வாக்கு. தாய்நாடு ஏற்றம்கண்டால்தான் நமக்கும் பெருமையுண்டு; நல்வாழ்வும் கிட்டும். எனவே' நாட்டுப்பற்று என்று சொல்லப்படும் தேசபக்தி நமது உள்ளததில் ஆழப்பதிந்திருக்கவேண்டும்.

தேசபக்தி என்றால் என்ன? அது இந்தநாட்டு மண்ணின்பால் உள்ள பற்றுதல் மட்டுமல்ல. பாரதத்தின் ஐக்கிய ஆட்சியிலும் சுதந்திர அந்தஸ்திலும் நமக்குள்ள நம்பிக்கைமட்டும் தேச பக்தியாகிவிடாது. தேசத்தைத் தாயெனக் கருதி வழிபடுவதும் போதாது. ஒவ்வொரு தேசத்துக்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. அதுதான் தேச-ஆசாரம் எனப்படுவது. நம்நாட்டுப் பெரியோர்கள் அதை பாரதப் பண்பாடு என்று அழைக்கின்றார்கள். அது சாதாரண இலக்கண வரம்புக்கு உட்பட இயலாத ஒரு தன்மை. ஆனால், அதை இந்த நாட்டிலுள்ள நாமெல்லோரும்சுலபமாக உணரமுடிகின்றது. ஆண்டவனின் அருளால் ஆழமாக வேருன்றி ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் நமது மூதாதையர் எவ்வளவோ கஷ்டப்பட்டு உருவாக்கித் தந்துள்ள அறநெறிதான் பாரதப் பண்பாடு. அது காலத்தால் புடம் போடப்பெற்ற பெருந்தனம்; தூய்மை நிறைந்த வாழ்க்கை வழி. அதைப் பேணிப் போற்றி வளர்ப்பது தான் உண்மையான தேச பக்தி. தேச ஆசாரம் என்பதனிடம் பற்றுதல்கொண்டு வாழ்க்கையை நடத்துவதுதான் சமூகம் பூராவுக்கும் சிறப்பைத் தரும்.

பாரதப் பண்பாடு என்பதன் அஸ்தி வாரம் தெய்வ பக்தியும் அதனுடன் இணைபிரியாமல்இருக்கும் சமயவழிபாடும். இவைதான் ஆணிவேர், பக்கவேர், போன்றவை, அறநெறிதான் அவற்றிற்கு வளர்க்கும் நல்வளர்ப்பு. சமுதாயம் என்ற மரம் இந்த செய்நேர்த்தியின் விளைவு. அது பலிதமாகும் விதத்தைப் பொறுத்துள்ளன நமது வாழ்வும் தாழ்வும். இது எல்லா மதங்களுக்குமே பொருந்தும், ஆகையால்தான் நமது முறைக்குத் தனிப்பெயரிடாமல் 'தருமம்' என்றே அழைத்தார்கள். இந்தத் தருமம் அழிவற்றது; சாசுவதமானது. இதன் அடிப்படைகள் நிரந்தரமானவை. அவற்றை நடத்திவைக்கும் முறைகள்மட்டும் காலநிலைக்கேற்பச் சிறிது சிறிது மாறுபட்டிருக்கலாம். மாறுபாடுகளை வேறுபாடுகள் என்று கருதிவிடலாகாது.

நமது ஹிந்து மதத்தைப்போன்ற கருணையுள்ள சமயம் வேறு எதுவுமில்லை. பல பெயர்களால் நாம் அறியும் ஆண்டவன் ஒருவனே. இந்த ஆண்டவனை அடைய பெரியோர்களால் உபதேசிக்கப்பட்ட வெவ்வேறு மார்க்கங்களை பின்பற்றுகிற எல்லோரும் பரஸ்பர ஸகிப்புத் தன்மையோடும் அன்போடும், பொதுவான அம்ஸங்களில், அன்னோன்யமாக ஒத்து உழைக்கவேண்டும். இஷ்ட தெய்வத்தை தூய்மையுடன் வழிபடவேண்டும் என்பதுதான் முக்கியமானது. அகத்தூய்மை. புறத்தூய்மை ஆகிய இரண்டுமே அவசியம். வீட்டில் வழிபடலாம். ஆலயத்துக்கும் தவறாது சென்று வணங்கவேண்டும். ஒவ்வொரு நாளும் தனிமையில் தியானம் செய்யவேண்டும் கோயிலில் அல்லது வேறு பொது இடத்தில் வாரந்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் சேர்ந்து பஜனை செய்யவேண்டும். அவரவருக்குரிய அனுஷ்டானங்களை விடாது செய்யவேண்டும். பெரியவர்களிடம் மரியாதையுடனும் சிறியவர்களிடம் அன்புடனும், எல்லோரிடமும் கருணையுடனும் இடைவிடாது நடந்துகொள்வதற்குப்பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். தெய்வத்திடம் நம்பிக்கை வைத்தால் எல்லாம் சரியாகத்தான் நடக்கும்.

தெய்வ வழிபாட்டுடன் இரண்டறக்கலந்து நிற்பது அறவழி. தனிப்பட்டவன் உயர்நிலை அடைவதும், சமூகம் ஏற்றம்காண்பதும் குண விசேஷங்களின் காரணமாகத்தான். முன்னோரது தவப்பயனாக ஓரளவு குணங்கள் தாமாகவே படிகின்றன. ஆனால், முறையான படிப்பு, சீரான நட்பு, வீட்டிலே ஒழுங்கு முறை, பெரியவர்களுடைய சேர்க்கை ஆகியவற்றின்மூலம் குணங்களை விருத்திசெய்துகொள்ள முடியும். மனித வாழ்க்கை ஒரு பெரும் பாக்கியம். அதை நன்கு பயன்படுத்திக்கொள்ள தெய்வவழிபாடு துணைபுரிகிறது. நமது உள்ளத்தில் ஆண்டவன் உறைகிறான் என்ற மெய்யுணர்வுஇருந்தால், மனதாரத்தவறிழைக்கத் தயங்குவோம். ஒவ்வொரு ஜீவராசியிலும் அவன் இருக்கிறான் என்ற நினைப்பு அகலாதிருந்தால் நாம் கருணைக்கடலாக வாழ்வோம். எல்லாவற்றையும் அன்பு ஆட்கொள்ளச் செய்வது அந்த நிலையில் சுலபமாக இருக்கும். அசையாப் பொருட்களிலும் பகவான் இருக்கிறார் என்ற எண்ணம், சூழ்நிலையைக் கெடுக்கும் எதையும் நாம் நினைக்கக்கூடாது, செய்யக்கூடாது சொல்லக்கூடாது என்ற எச்சரிக்கையாக அமையும். தன்னுயிர் போலத்தான் மன்னுயிர் என்ற உணர்ச்சி ஓங்கினால்தான் செயலாற்ற முடியும். ஆகையால் நான் தெய்வபக்தியும் தெய்வ வழிபாடும் அடிப்படைத் தேவைகள் என்று கருதப்படுகின்றன.

ஆலய வழிபாட்டைப் போலவே அறவாழ்வும் முக்கியமானது. வேதங்கள், உபநிஷத்துக்கள், ஆகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள், ஆழ்வார் நாயன்மார் பாடல்கள், திருக்குறள், உயர்



ந்த சாகித்தியங்கள், பெரியவர்களுடைய வாழ்க்கை அனுபவங்கள் ஆகிய எல்லாமே இதைத்தான் சொல்கின்றன. தனி நபர் மட்டுமின்றி; சமூகமும் இணக்கமாக முன்னேறுவதற்கு அறவாழ்வுதான் துணைபுரியும், தெய்வபலமின்றி அது தனியாக இயங்குவது சாத்தியமல்ல. ஆகையால்தான் நாம் எதையெல்லாம் செய்யவேண்டும், எவற்றையெல்லாம் தவிர்க்கவேண்டும் என்பதைப் பெரியவர்கள் தெளிந்தறிந்து நமக்குச் சொல்லிப் போயிருக்கிறார்கள். அவற்றின்படி நடந்தால் எல்லோருக்குமே நன்மையுண்டு.

ஒவ்வொரு மாணவனும் படிக்கும் வயதில் வேறு எந்த ஆசையிலும் மனத்தைச் சிதறவிடக்கூடாது. முழு மூச்சுடன் படித்து, ஞானத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். சிறுவயதில் படிப்பது தான் நிலைக்கும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது மூதுரை. உண்மையைக் கடைப்பிடிக்கவேண்டும். அன்புடன் வாழவேண்டும். நல்ல பழக்கமும், நல்ல படிப்பும் அஸ்திவாரமாக அமையும்படிச் செய்வது பெற்றோர் உபாத்தியாயர்கள், சமூகத் தலைவர்கள். ஆட்சியாளர் ஆகிய எல்லோருக்குமே உள்ள கூட்டுப் பொறுப்பு. படிக்கும் பொழுதே நல்லொழுக்கம், திடசித்தம், உடல்வலிமை ஆகிய மூன்றும் படியச்செய்வதுதான் கல்வி மற்றவை மட்டமானவைதான். எனவே, கல்விக்குத் திட்டமிடுகிறவர்களுக்கு விசேஷ பொறுப்பு உண்டு.

கட்டு திட்டம் இருப்பவன்தான் முன்னுக்கு வரக்கூடியவன். திடீரெனச் சம்பாதித்துக் கொள்வது சிரமம். ஆரம்பத்திலிருந்தே அது சுபாவமாக அமைந்து வளரவேண்டும். புலனடக்கி, கட்டுத்திட்டமாக வாழ்ந்து. வஞ்சனையின்றி உழைத்தவர்கள் தாம் உயர்நிலையை அடையமுடியும். இது உலக சரித்திரம் கூறும் உண்மை; அனுபவ பூர்வமாகப் பெரியவர்களெல்லாம் தெளிந்தறிந்த விஷயம். எனவே, கட்டுப்பாடு வளரக்கூடிய விதத்தில் கல்வியை ஒழுங்குசெய்து வளர்ப்பது, நம் நாட்டின் எதிர்கால க்ஷேமத்திற்கு மிக மிக அவசியம்.

### ராமநாமம்

ராமநாமத்தில் நம்பிக்கையுண்டா இல்லையா என்று அறிவதற்குரிய வழி அனுஷ்டானமேயாகும். மனிதனுடைய உடலானது மண், நீர், ஆகாசம், சூரியன் காற்று ஆகிய ஐம்பூதங்களாலேயே ஆக்கப்பட்டிருப்பதால் அவற்றைமட்டுமே சிகிச்சைக்கான சாதனங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவற்றுடன் ராமநாமபஜனையும் அவசியம்.

# 'செயற்கரிய செய்வார் பெரியர்'

[வித்துவான் : ஜனார்த்தனம்]

---

புறநானூற்றுப் பாடல்களிலே ஒன்றில் ஓர் புலவர் இவ்வுலகம் உண்டு என்றார். மேல்நோக்காகக் காணுமிடத்து உலகம் உண்டு என்ற உண்மையைக்கூற ஓர் புலவரும் அதற்கொருபாடலும் வேண்டுமா? என்று தோன்றும். ஆனால் இவ்வுலகம் நிலைபெறுவதற்கு அப்புலவர் கூறும் காரணமே ஆய்தற்குரியது. ''தமக்கென முயலாநோன்றாட் பிறர்க்கெனமுயலுநர் உண்மையானே உண்டாலம்ம இவ்வுலகம்'' என்பதுதான் புலவர் வாக்கு. அதாவது தமக்கென வாழாது பிறர்க்குரியவராய் வாழும் பெரியார்கள் உள்ளமையால் இவ்வுலகம் நிலைபெறுகிறது என்பதாம். எல்லா உயிர்களையும்தம் முயிர்போலெண்ணி அன்பு செலுத்தும் இயல்புடையாருக்கே பிறர்க்கென வாழமுடியும் ''ஈஸாவாஸ்யம் இதம் ஸர்வம்'' அதாவது ஈசன் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கிறான் என்பதை உணர்ந்தவர்களுக்கே எவ்வுயிரையும் நேசிக்கமுடியும். அத்தகைய அன்புடையாரைக்குறித்து வள்ளுவர் பெருந்தகையும்,

***'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு''*** என்றார்.

அன்பிலாா மண்வெட்டியைப்போல மண்ணையும் குப்பைகூழங்களையும்தன்னைநோக்கியே இழுக்கும்இயல்புடையவர். ஆனால் அன்புடையார் ஏரினைப்போல மண்ணை உழுது மறிப்பது போன்றுபிறர்க்கெனவேவாழ்வார்.இக்குறளுக்குப்பரிமேலழகர் உரைகூறுமிடத்து எலும்பைப் பிறர்கருரிமையாக்கியமைக்கு வச்சிராயுதம் செய்யத் தம் முதுகெலும்பை இந்திரனுக்கீந்த ததீசிமுனிவரை உதாரணமாகக் காட்டினார். ஆனால் இருபதாம் நூற்றாண்டில் அன்பு, சத்தியம், அஹிம்சா தத்துவங்களைப் பரப்பி அதன்படி வாழ்ந்து இந்தியாவிற்குச் சுதந்திரம் வாங்கித்தந்த மகாத்மாகாந்தியடிகள் இறந்தபோது அவரது எலும்புக்கூட பிறர்க்குரிமை யாக்கப்பட்டதை எண்ணும்போது இக்குறளுக்கு இலக்கியமாக வாழ்ந்தார் என்பது விளங்கும். இத்தகைய பெரியார்கள் திண்ணியர் ஆதலால் எண்ணிய எண்ணியாங்கு எய்தினர். இனிச் செயற்கரிய செய்வார் பெரியர் என்றும் சிறியர் செய்தற் கரிய செய் கலாதார் என்றும் கூறினாரல்லவா? செயற்கரியது எது என்பதை ஆயுங்கால் வள்ளுவனாரே அதனையும் விளக்கியுள்ளமை காணலாம். 'சொல்லுதல் யார்க்கும்எளிய அரியவாம்சொல்லிய வண்ணஞ்செயல்' என்பதாம் தாம் சொல்பவற்றைச் செயலில் காட்டுபவர்களே பெரியார்களாகும். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று கூறாது 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்றபடி உயர்ந்த சிந்தனையும் இனிய பேச்சும் அதன்படிச் செயலும் உடைய அன்புடையாரே பெரியாராவர்.



மேற் கூறிய இலக்கணங்கள் யாவும் அமையப் பெற்றவரே எமது குருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ அபேதானந்த பாரதி திருவடிகள். இவர்கள் செய்த செயற்கரிய செயல் யாது? எதற்காகச் செய்தார்கள்? எப்படிச்செய்தார்கள்? என்ற வினாக்கள் எழலாம். இறைவனையடையச் சாத்திரங்களும் தோத்திரங்களும் வழிவகுத்துள்ளன. முன்னையது கற்றோரால் மட்டும் பின்பற்றற் குரியது .ஆனால் பின்னையது பண்டிதர் முதல் பாமரர்வரை யாவராலும் ஒருங்கே கையாளத் தகுந்தது. அப்பர் சுவாமிகள்:-

**'ஜலம் பூவொடு தூபம் மறந்தறியேன்**
**உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்''** என்றார்.

'சறுக்கி வீழினும் நமச்சிவாயவே' என்றபடி அவன் நாமத்தைப் பிரசாரம் செய்யும் பணியில் ஈடுபட்டார்கள். அதற்காகவே அகில இந்திய நாமப்பிரசார பசனை மண்டலியுடன் குமரியிலிருந்து புறப்பட்டு சென்னை வரையில் தமது யாத்திரையின் முதல் கட்டத்தை முடித்துள்ளார்கள். நாமம் சொல்லும்போது ஜலம் பூவொடு தூபம் மறந்தறியேன் என்றவாறு அபிஷேகமும் அர்ச்சனையும், தீபாராதனையும் முக்கிய அங்கங்களாயிற்று. அவற்றுள் அர்ச்சனை புரிவதில் 'ஒருநாமம் ஓர் உருவம் இல்லாத பெருமானை ஆயிரம் திருநாமம் சொல்லி மலரிட்டுப் பூசிப்பதனை சகஸ்ரநாம அர்ச்சனை என்பர் இலட்சார்ச்சனைகள் பல இதுவரை உலகில் ஆங்காங்கே நடந்துள்ளன. ஆனால் ஈசன் எல்லையற்றவன் எண்களில் 'ஒன்று பத்தடுக்கிய கோடி கடை இரீஇய' என்றபடி கடைசி எண்றபடி கடைசி எண் கோடியாகும். எல்லையற்ற ஈசனை எண்களின் எல்லையாகிய கோடித்தடவை அர்ச்சிக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.எதற்காகதமக்காகவா? அதுதான்இல்லை. உலகம்வாழ வேண்டுமென்ற பேரருளால்தான். இத்தகைய பெருங்காரியத்தை செய்துமுடிக்க பெருந்திரலான மக்களும் பொருளும் வேண்டுமே என் செய்வது இப்போதுதான். 'இறைவன் தமது சங்கற்பத்தால் உலகைப் படைத்துக் காத்து அழிக்கிறான்' என்ற தத்துவத்தின் பொருள் விளங்குகிறது. தமிழ் நாட்டின் வடகோடியிலிருக்கும் சென்னையில் ஒருகோடியும் கேரளத்தின் தென்கோடியிலுள்ள திருவனந்தபுரத்தில் ஒருகோடியும் அர்ச்சனைகள் நடந்தன. எப்படி நடந்தது அதுதான் திண்ணிய எண்ணத்தின் முடிவு. செயற்கரிய செயல் செய்பவர் பெரியார். ஆனால் நாம் செயற்குரியவாவது செய்யவேண்டாமா? செயற்குரியது யாது? இத்தகைய பெருங் காரியங்களில் மனதாலும், வாக்காலும், செயலாலும் ஒத்துழைப்பதுதான். கழுத்தறுப்பதும், கொள்ளை கொலைகளையும் பிரமாதமாக விளம்பரப்படுத்தும் பத்திரிகைஉலகில் 'ஆத்மஜோதி, யானது பெரியார்களின் அரும்பெருஞ் செயல்களை உலகறியச்செய்துவரும் பெரும்பணி போற்றற்குரியதாகும்.

'வாழ்க ஆத்மஜோதி'

# "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே"

*

எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவி வாய்த்தல் அரிது. அதிலும் கூன் குருடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது. பேடு நீங்கிப் பிறந்த காலையும் தானமும் தவமும் தான் செயல் அரிது தானமும் தவமும் தான் செய்வராயின் வானவர் நாடுவழி திறந்திடுமே—இது ஔவை வாக்கு. மானிடர்களாகிய நமக்கு சிற்றறிவே காட்டக் காணும் அறிவன்றி சுயமாக அறிதல் அரிது. தாய் காட்டத் தந்தையையும், தந்தை காட்டக் குருவையும், குரு காட்ட இறைவனையும் அறிய முடியும்.

அன்னை, பிதா, குரு இம்மூன்றும் அமைதல் அவரவர் முன்வினைப் பயனாலாகும். ஒருவன் உலகில் பிறக்கும் போதே அன்னையும் பிதாவும் நம் இச்சைக்கு விபரீதமாகவே அமைந்து விடுகிறது. ஆனால் ஆசானை அடைவதற்கு நமது பகுத்தறிவைக் கொஞ்சம் உபயோகிக்க முடியும், இறைவனையடையும் மார்க்கங்களை உபதேசிக்கும் குருவினைத் தேடும்போது முன்வினைப் பயனும் முன்னிற்கிறது.

காவியுடுத்த சன்யாசிகளில் பலர் இன்று நம்மிடையில் காணப்படுகின்றார்கள். அவர்களில் பலரும் கவிஞராகவும், யோகியராகவும், சொற்பொழிவாளர்களாகவும், சேவைபுரிவோராகவும் விளங்கி உலகிற்குத் தொண்டாற்றுகின்றார்கள். சித்துக்கள் பல புரிந்து மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துபவர்களுக்கும் குறைவில்லை.

ஒரு நதியின் இருகரைகளிலும் இரண்டு சன்யாசிகள் இருந்தனர். ஒருவர் பக்தர் மற்றவர் ஹடயோகி. பக்தராகிய சன்யாசி எப்போதும் சிரித்த



முகத்துடன் வந்தவர்களை வரவேற்பார். ஹடயோகியோ பல வகை சித்துக்களைக் காட்டி மக்களை மயக்க வைப்பார். பக்தரான சன்யாசியின் சீடன் ஒருவன் ஒருநாள் ஹடயோகியிடம் வந்தான். அவனைப் பார்த்து ஹடயோகி சொல்லுவார். அப்பா! நீ உன் வாணாளை வீணாக்குகின்றாயே உனது குருநாதனுக்கு என்ன தெரியும். எம்மிடம் வந்தால் பல சித்துக்களையும் அடையலாம். என்று கூறினார். இதைக் கேட்ட சீடன்! ஐயா! எமது குருநாதனுக்கு உங்களுக்குத் தெரியாத இரண்டு சித்திகள் தெரியும் அது ஒருநாளும் உங்களுக்கு வராது என்றான். அப்படியா அது என்ன சித்துக்கள் என்றார். ஹடயோகி அதுவா எமது குருநாதர் "தமக்கு ஒன்றும் தெரியாது என்பதை ஒப்புக்கொள்வார். பிறரை ஒரு போதும் குறைகூற மாட்டார். இவ்விருசித்துகளுமே எமது குருநாதரிடம் விசேஷமாக அமைந்துள்ளவை என்றான். இதைக் கேட்ட ஹடயோகி வெட்கிப் போனார். ஆம், பிறக்குறை குறைகூறா திருத்தலும் தமக்கொன்றும் தெரியாதென நினைக்கும் வினய குணமும் கிடைத்தற் கரிய சித்துக்களல்லவா? இத்தகைய இத்தியைப் பெற்றவர்களுள் எமது குருநாதராகிய ரிஷிகேசத்தில் விளங்கும் சுவாமி சிவானந்த சரஸ்வதியவர்கள் ஒருவர் என்பதகைக் குறிப்பிட விரும்புகிறேன். அத்தகைய பெருமானைக் குருவாக அடைந்ததில் எமக்கு மிக்க மகிழ்ச்சி எமது குருநாதரின் ஆசி பெற்று சென்ற ஆண்டு தென்னாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து வரலானோம். குமரி வந்தடைந்தபோது. அகில இந்தியா நாமப்பிரசார யாத்திரை தொடங்க வந்திருந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ அபேதானந்த பாரதி திருவடிகளைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. இம்மகானை சுமார்

160-ம் பக்கம் பார்க்க......

## என்னை ஓர் வார்த்தையுட் படுத்தி. "நம்பி"

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய ஆண்டவனை-அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய ஆண்டவனை—வானாகி மண்ணாகி, ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய் நின்றானை—எவ்வண்ணமறிவது எங்கே காண்பது என்ற எண்ணம் உதிக்கிறது. அதனால் விரதங்களனுட்டித்து. யாத்திரை சென்று. தீர்த்தங்களாடி, சாத்திரங்களை புரட்டி அப்பரம் பொருளைக் கிட்ட முடியவில்லை. ஆனால் இவை பலனளியாமல் போகவுமில்லை முன்னை நல்வினைப்பயனும் இம்மை நல்வினைப் பயனும்ஒன்றுசேர "மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய் தரிசித்தவர்க்கு வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே' என்ற தாயுமானார் அருள் வாக்குக் கிசைய குருபரன் கிட்டுகின்றான் பக்குவ நிலையெய்திய ஓர் சீடனுக்கு. சீடன் கடவுளைக் காணுகின்றான். எங்குள்ளான்—எவ்வணத்தன் என்றிருந்த ஆண்டவனை—எல்லா உலகமுமாயினானை, ஒளியில் விளைந்த உயர் ஞான பூதரத்துச் சியின்மேல் அளியில் விளைந்த ஆனந்தத்தேனை — வெளியில் விளைந்த வெறும் பாழை. — தெளிய விளம்பக் குருபரன் கருணை கூறுகிறார். தன்னந்தனி நின்ற—தானேயறியக்கூடிய — இன்னம் ஒருவர்க்கு இசைவிக்க முடியாத மனம், வாக்குக்கு எட்டாத மாண்பினானைத் தன் வாக்கினால்ஓர்வார்த்தையுட் படுத்திக் குருபரன் தன் சீடனுக்குத் திருவுளம் திறந்து பார்த்து, பரிசித்து, ஆசீர்வதித்து உபதேசிக்கிறார் இனியென்னே உய்யுமாறென்றென் றெண்ணி ஏக்கமுற்றிருந்த சீடனுக்கு இப்போ புதிய பல கேள்விகள் எழுகின்றன கடவுள் யார்? கடவுள் எங்கே ?? என்றதெல்லாம் போய் நானார் — என்னுள்ளமார் ஞானங்களார்? என்ற கேள்விகள் உதயமாகின்றன அவ்விடத்தில் கடவுளைத் தேடும் செயல் முற்றுப் பெறுகிறது அது—நீ நீ—அது. இத்துடன் யாவும்



முடிந்ததுகுருநாதன் சீடனுக்குரைத்தமந்திரோபதேசத்தில் அடங்கிய ஓர் வார்த்தையுண்டு. அதனுள் அனைத்தும் அடங்கியுள்ளது. அது அனைத்திலும் அடங்கியுள்ளது. பார்க்குமிடமெங்கும்— நீக்கமற நிறைகிற்ற பரிபூரணானந்தப் பொருள் அந்த ஓர் வார்த்தையுட் படுத்தப்பட்டாயிற்று. பரிபூரணத்துக்கப்பால் மிச்ச மெதுவுமிருக்காது. ஆகவே அதனுள் ''நான்'' உம் அடங்கிவிட்டது. ஆகவே நானும் அவ்வார்த்தையுட் படுத்த பட்டவன். அவ்வார்த்தைகுறிக்கும் வஸ்து நானே இதையே "என்னை ஓர் வார்த்தையுட் படுத்தி" என்றார் மணிவாசகர்.

இல்லையெனும் மாயையில் கட்டுண்டு பொல்லா அறியாமையால் மதிமயங்கி இருவினைச் சேற்றில் இடருற்று ஊழ்வினை உடற்றும் உடலினை நான் என மதித்து இறப்பவன், பிறப்பவன், துன்பமடைபவன். இன்பமடைபவன், ஆண், பெண். பெரியவன், தாழ்ந்தவன், என்றதெல்லாம் போய் அகண்டாகார சிவமாய் மிஞ்சியவித்தை அந்த ஒரு வார்த்தையுட் பட்டு நின்றது. அதுதான் குருபரன் கூறிய ஒருவார்த்தை.

புற்றுமாய் மரமாய்ப் புனல் காலே யுண்டியாய்
அண்டவாணரும் பிறரும்
வற்றியாரும் நின் மலரடிகாணா மன்ன
என்னையோர் வார்த்தையுட் படுத்திப்
பற்றினாய் பதையேன் மனமிக உருகேன் பரிகிலேன்
பரியா உடல் தன்னைச்
செற்றிலேன் இன்னும் திரிதருகின்றேன் திருப்பெருந்
துறை மேவிய சிவனே.

157-ம் பக்கம் தொடர்ச்சி......

18-ஆண்டுகளுக்கு முன்னரே அறிவோம். எம்மைக் கண்டதும் அன்பு ததும்பும் கரங்களால் தழுவி உடன் வருமாறு ஆணையிட்டார்கள். இதுவும் ஓர் பாக்கியமே சுமார் 9 மாதகாலங்கள் சுவாமிஜிகளுடன் யாத்திரை செய்தோம். சென்னையில் ஒரு கோடி, திருவனந்தபுரத்தில் ஒரு கோடி அர்ச்சனைகள் நடந்தன அப்பெருமானது அருங்குணங்கள் எம்மைப் போகவிடாது தடுத்து நிறுத்தியது இதோ மீண்டும் ரிஷிகேசம் புறப்படுகின்கின்றோம். ஏமது மனத்தில் எழும் இன்பம் ஆஹா இமயத்தில் ஒரு ஜோதி குமரியிலும் ஒரு ஜோதி இரு ஜோதிகளையும் காணும் வாய்ப்பு. அதனை ஆத்மஜோதி அறிமுகப் படுத்திய பெருமை இவைகளைக் காணும் போது ''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே''? என்று செஞ்சோடு தான் கேட்கிறேன்.

**- நிர்மலானந்தா**

ஓம்

வாயால் மட்டும் ராமநாமத்தைப் பஜிப்பதால் எவ்வித சக்தியும் கிடைக்கமாட்டாது. கடவுள் நாமத்தைப் பஜிக்க விரும்புகிறவர்கள் கடவுள் வகுக்கும் முறைப்படி வாழவேண்டியது இன்றியமையாததாகும்.

தவறான எண்ணங்களைத் தடுக்காதிருந்தாலும் அசுத்தமான காற்றைச் சுவாசித்தாலும் அழுக்கான ஜலத்தைக் குடித்தாலும் ராமநாம பஜனையால் எவ்வித பயனையும் அடைய முடியாது.

—காந்தி

# தமிழ் மறைக் கழகம்.

## திருக்குறள் இரசிய மொழிபெயர்ப்பு.

அண்மையில் நடைபெற்ற தமிழ் மறைக் கழக ஆட்சிமன்றக் கூட்டத்தில் இரசிய மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்து வெளியிடும் பணியைத் தொடங்கியதற்காகச் சோவியத்து விஞ்ஞான மன்றத்தின் கீழைத் தேசக் கலைக்கழகத் தலைவருக்கு தமிழ் மறைக் கழகத்தின் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருக்குறளின் இரசிய மொழிபெயர்ப்பு, இவ்வாண்டிலேயே முடிந்துவிடும் எனவும் இம்மொழிபெயர்ப்புக்குத் தமிழ் மறைக் கழகத்தின் ஆதரவாளர் பேராசிரியர் அ. கிருட்டிணமூர்த்தி அவர்கள் உதவி செய்கிறாரெனவும் தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதரும் திரு; கா. போ. இரத்தினம் அவர்கள் தெரிவித்தார்கள்.

## மொசுக்கோவில் திருவள்ளுவர் திருநாள் விழா.

சோவியத்து வெளிநாட்டுறவுக் கழகத்தின் சார்பில் 22-5-59ல் திருவள்ளுவர் திருநாளை மொசுக்கோவில் கொண்டாட ஒழுங்குகள் செய்யப்படுவதை வரவேற்று அக் கழகத்துக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்க வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாண்டுத் திருவள்ளுவர் திருநாளை 22-5-59 வெள்ளிக்கிழமையன்று தமிழ் கூறு நல்லுலகமெங்கும் கொண்டாடுவிக்க வேண்டுமென்றும், இத்திருநாள் விழாவையொட்டி எல்லாக் கிராமங்களிலும் திருக்குறள் மனனப் போட்டிகளை நடத்திப் பரிசில்கள் அளிக்குமாறு கிராம முன்னேற்றச் சங்கங்களையும் தமிழ் நிலையங்களையும், பாடசாலைகளையும் வேண்டிக்கொள்ளுதல் வேண்டுமென்றும் தமிழ் மறைக் கழகம் முடிவு செய்துளது.

## திருவள்ளுவர் தொடர் ஆண்டு.

திருவள்ளுவர் தொடர் ஆண்டையும் வழக்குக்குக் கொண்டு வருமாறு தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் தமிழ் நிலையங்களுக்கும் தமிழ்ப் பெருமக்களுக்கும் வேண்டுகோள் விடுப்பதென்றும் திருவள்ளுவர் தொடராண்டை வழங்கிவரும் பத்திரிகைகளுக்கும்சங்கங்களுக்கும் நன்றி தெரிவிப்பதென்றும் ஆட்சி மன்றத்தினர் முடிவு செய்துளர்.

ஏழாவது திருக்குறள் மாநாடு யாழ்பாணத்தில் மே 22, 23, 24-ஆம் திகதிகளில் நடத்தப்படும் மாநாட்டில் திருக்குறள் நூற் காட்சியும் இடம் பெறும்,

Registered at the G. P. O. as a News Paper M. L. 59/300

உ
நல்ல விநாயகர் துணை

# ஸ்ரீ முன்னேஸ்வரம் திருக்குளத்திருப்பணித் தரும விஞ்ஞாபனம்

திருவருள் நிறைந்த ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்ரத்தில் சிவதீர்த்தமென்ற திருக்குளத்திருப்பணிக்கு சுமார் 60,000 ரூபாய் வரையாகுமென மதிப்பிட்டு கருங்கல் வேலை நடந்து வருகிறது. இப்பெருஞ் சிவ கைங்கர்யத்துக்கு புண்ய சீலர்களனைவரும் தங்களாலியன்ற பொருளுதவி செய்து ஸ்ரீ வடிவாம்பிகாஸமேத முன்னைநாதப்பெருமான் திருவருள் பெற வேண்டுகிறோம்,

இங்ஙனம்
சி. பாலசுப்ரமண்யக் குருக்கள்,
தர்மகர்த்தா.


## - சர்க்கரை கொல்லி சூரணம் -
(DIABETES) என்னும்
நீரிழிவு மதுமேகத்திற்கு மிகச்சிறந்த சூரணம்.
யாவும் மூலிகையினால் சித்தர்களின் அனுபவ முறைப்படி தயாரிக்கப்பட்டது.
சர்க்கரை வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அற்புத ஔடதம்.
தபாற்சிலவுட்பட டின் ரூபா 6-75.
☞ SAMBU INDUSTRIES – SALEM 2 (S.I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:
ஆத்மஜோதி நிலயம்
நாவலப்பிட்டி - சிலோன்.


Printed by N. Muthiah at the Sri Murugan Press - Punduloya.
Published by N. Muthiah Athmajothi Niliyam - Nawalapitiya